| O.S.No. 184/2024 | DW1: திருமதி. ராணி க/பெ. திரு. மேகநாதன் | 29-06-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. கோபாலகிருஷ்ணன் எனது மகன். 1–ம் பிரதிவாதி லலிதா கோபாலகிருஷ்ணனின் மனைவி ஆவார். 2–ம் பிரதிவாதி மகன் ஆவார். 3–ம் பிரதிவாதி மேகநாதன் என் கணவர். நாங்கள் அனைவரும் வைத்தியர் தெருவில் ஒரே குடும்பமாக வசித்து வந்தோம். எனது மகன் கோபாலகிருஷ்ணன் வைத்தியர் தெருவில் ஒரு பங்க் கடை வைத்து நடத்தி வந்தார். வாதி ரஞ்சித் நாங்கள் வசித்த தெருவிற்கு பக்கத்து தெருவில் வசித்து வந்தார்.

2. எனது மருமகள் லலிதாவும், மகன் கோபாலகிருஷ்ணனும் வாதியிடம் கடன் வாங்கினார்கள் என்றால் இல்லை, வாதியின் தந்தையிடம்தான் கடன் வாங்கினார்கள். என்ன வழக்கு என் மீது போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் எனது மருமகளும், மகனும் சேர்ந்து வாங்கிய கடனுக்கான ஆவணம் என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்துக்கள் எனது மகன் மற்றும் மருமகளுடையதுதான். அந்த கடன்களை எனது மகன் செய்து வந்த தொழிலுக்காக வாங்கினார் என்றால் சரிதான். கடன் வாங்கிய பிறகு என் மகன் கோபாலகிருஷ்ணன் இறந்துவிட்டார். என் மகன் வாங்கிய கடனை செலுத்த முடியவில்லை என்ற மன அழுத்தத்தில் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரிதான். ஜெயக்குமார் என்பவர் ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் என் மீதும், என் கணவர் மீதும், மருமகள் மற்றும் பேரன் மீதும் அ.வ.எண்.384/2021 வழக்கினை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

3. ஜெயக்குமாரிடம் ரூ.3 லட்சம் கடன் வாங்கிக்கொண்டு நான், எனது கணவர், மருமகள் மற்றும் மகன் சேர்ந்து ஒரு பாண்டு எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான், நாங்கள் வாதியின் தந்தையிடம்தான் ரூ.6 லட்சம் கடன் வாங்கினோம், அவரது மகனிடம் வாங்கவில்லை. அந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. அந்த வழக்கில் எனது மருமகளை சாட்சியாக விசாரித்தார்கள், அப்போது நானும் இருந்தேன். அந்த வழக்கில் எனக்கும் என் கணவருக்கும், இரண்டு மகள்கள் வாரிசாக இருப்பது பற்றி குறிப்பிட்டு சொல்லவல்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. அந்த தீர்ப்பின் பேரில் ஜெயக்குமார் என் மீது நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4. ஜெயக்குமார் அனுப்பிய அறிவிப்பில் அவரிடம் ரூ.3 லட்சம் கடன் வாங்கியதாகவும், அவரது மகனிடம் ரூ.6 லட்சம் கடன் வாங்கியதாகவும் குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. அந்த நோட்டீஸுக்கு பதில் அறிவிப்பு ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் இல்லை. வாதி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை, அது எனது மருமகளுக்குத்தான் தெரியும். நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாகத்தான் உள்ளோம். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது 3-ம் பிரதிவாதியான எனது கணவர் மேகநாதன் இறந்துவிட்டார். இந்த வழக்கில் வாரிசுகள் குறித்து வாதி மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மனுவில் எனது இரு மகள்கள் குறித்து ஆட்சேபனை செய்தீர்களா என்றால் இல்லை.

5. எனக்கு 2 மகள்கள் இருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வழக்கிற்காக எனக்கு 2 மகள்கள் இருப்பதாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னவாறு எனக்கு மகள்கள் இருந்திருந்தால் அதைப்பற்றி ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கிலும், இந்த வழக்கில் தாக்கல் செய்த மனுவிலும் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. தலா ரூ. 3 லட்சம் வீதம் இரண்டு கடன்களுக்கு எனது மகனும், மருமகளும் வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக தாவா பாண்டுகளை எழுதிக்கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நானும், எனது கணவரும் தாவா பாண்டுகளில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. நாங்கள் குடியிருந்து வரும் வீடு எனது மகன் கோபாலகிருஷ்ணன் பெயரில் உள்ளது. என் மகன் மாதம் மாதம் பணம் கொடுத்து வந்தார் என சொல்வதற் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. எனது மகன் உயிரோடு இருந்த காலம்வரையில் தாவா பாண்டுகளுக்கு எந்தவொரு வட்டி தொகையும் வாதிக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் அவ்வாறு கொடுத்திருந்தால் பாண்டில் வரவு வைக்கப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. பாண்டிற்கான எந்த தொகையையும் கொடுக்காத காரணத்தினால்தான் வரவு எதுவும் வைக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கினை எனக்கு படித்து காண்பித்தார்கள். வழக்கில் வாதியிடம் ரூ. 6 ட்சம் கடன் வாங்கியது குறித்தும், அவரது தந்தையிடம் ரூ.3 லட்சம் கடன் வாங்கியது குறித்தும் சொல்லப்பட்டுள்ளது என்றால்

அவ்வாறு சொல்லவில்லை. வாங்கிய கடனை ஏமாற்றவேண்டும் என்பதற்காக வாதியிடம் கடன் வாங்கவில்லை என்றும், வாதியின் தந்தையிடம் கடன் வாங்கியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், தாவா கடனை நாங்கள் அனைவரும் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று சொன்னாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

ஒம்/- ராணி

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.06.29 12:46:30 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**